9th November 1965]

செய்யப்பட்டனவா ? அல்லது, மனுக்கள் தள்ளப்பட்டு டிஸ்போஸ் செய்யப்பட்டனவா ? அதனுடைய விவரம் தெரியவில்லை. எத்தனை லைசென்சுகள் வழங்கப்பட்டன என்று விவரமாக அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கேஸ்கள் பரிசிலனை செய்து முடிவு எடுக்கப்பட்டதைத்தான் நான் சொன்னேன். இந்த டிஸ்போஸ் ஆன கேஸ்களில் எத்தனை மனுதார்களுக்குச் சாதக மாக இருந்தன, எத்தனை சாதகம் இல்லாமல் இருந்தன என்று தனியாகக் கேள்வி போட்டால், பதில் சொல்லலாம்.

திரு. டி. எல். சசிவர்ண தேவர் : ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருந்த மில்கள் நஷ்டத்தினுல் மூடப்பட்டவை எத்தனை என்ற விவரம் அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அது விவரம் என்னிடம் இல்லை.

உணவு தானியக் கிடங்குகள்

* 377 கேள்வி.—திரு. ப. உ. சண்முகம் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

தமிழ் நாட்டில் கட்ட உத்தேசித்துள்ள உணவு தானியக் கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டனவா ?

THE HON. SRI V. RAMAIAH : It is presumed that the hon. Member refers to the construction of godowns in Chingleput, Thanjavur and Tiruchirappalli districts undertaken by this Government on an agency basis on behalf of the Central Warehousing Corporation. The construction of these godowns has been completed and the ancilliary work like construction of administrative block, quarters for watchmen, isolation sheds, formation of roads, etc., are in various stages of progress.

திரு. ப. உ. சண்முகம் : திட்டமிட்டபடி இந்தக் கிடங்குகள் எத்தனை காலத்திற்குள்ளாகக் கட்டி முடிக்கப்பட வேண்டும் ? எத்தனை காலத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இதை அவசர கால வேலையாக எடுத்துக்கொண்டு இதுபோன்ற மற்ற கட்டடங்களைக் கட்டு வதற்கு எவ்வளவு காலம் ஆகுமோ அதைவிட மிகக் குறுகிய காலத்திலேயே கட்டி முடித்திருக்கிறார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அமைச்சர் அவர்கள் இந்த மூன்று கிடங்குகளும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன என்று அறிவித்தார்கள். இந்த மூன்று கிடங்குகளுக்கும் மொத்தமாகச் செலவாகியுள்ள தொகை எவ்வளவு ?

கனம் திரு. வெ. ராமைய்யா: அந்த விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. காரணம், இன்னும் வாட்ச்மென் க்வார்டர்ஸ், ரோடுகள் வேலை நடந்து கொண்டிருப்பதனால் முடிவான செலவுத் தொகை விவரம் வரவில்லை.

நியாயவிலைக் கடைகள்

* 378 கேள்வி.—திரு. மு. கருணாநிதி:
திரு. கி. நாராயணசாமிப் பிள்ளை: } கனம்
உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-65-ம் ஆண்டில் எத்தனை நியாய விலைக்கடைகளைத் திறக்க அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது?

(இ) அனுமதி வழங்குவதில் அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH: (a) 700 shops. With the introduction of the Family Card System, the fair price shops ceased to exist.

(b) Does not arise.

திரு. வி. எஸ். எஸ். மணி: கிராமப் பகுதிகளில் வசிக்கும் நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் உணவுப் பொருள் கிடைப்பதில்லை. அந்த மாதிரியான பகுதிகளில் கட்டாயமாக நியாயவிலைக் கடைகளைத் திறக்க உத்தரவு அனுப்பப்படுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: நியாயவிலைக் கடைகள் என்பது முன்பு 1960, 61, 62-இல் மத்திய அரசாங்கம் கொஞ்சம் அரிசி கொடுத்து, அதை அரிசி கிடைக்காத பகுதிகளில் விநியோகிக்க நியாயவிலைக் கடைகள் வைத்துக் கொடுத்தோம். இந்த வருஷம் நாமே கொள்முதல் செய்து விநியோகம் செய்வதனால்—நெசவாளர்கள் மட்டும் அல்ல—யாருக்காக இருந்தாலும் ஒரு பகுதியில் அரிசி கிடைக்கவில்லை என்றால் உடனே அதுபற்றி கலெக்டரிடம் தெரிவித்தால் அந்தப் பகுதிக்கு அரிசி சப்ளை செய்ய வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: வடாற்காடு மாவட்டத்தில் ரேஷன் கொண்டு வரவேண்டுமென்ற நிலைமை சென்ற மாதம் 21-ஆம் தேதியே ஏற்பட்டது. தேவையான அளவு அரிசி கிடைக்கக் கூடிய பகுதிகளில் ரேஷனைக் கொண்டுவரவேண்டிய அவசியம் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா: சென்னை, கோவை ஆகிய இரு இடங்களைத் தவிர வேறு எங்கும் ரேஷன் கொண்டுவரப்படவில்லை. மற்ற இடங்களில் கஷ்டம் இருந்தால் குடும்பக் கார்டு முறையில் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.